புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • ஜூன் 12, 2025 • புரட்சி 25 • முழக்கம் 22 • விலை ரூ.6.00

## திருப்பரங்குன்றத்தின் வரலாறு என்ன?

# மதக்கலவரத்தை தூண்டும் அமித்ஷா

திருப்பரங்குன்றம் மலை உரிமை தொடர்பான வெவ்வேறு பிரச்சினைகள் ஒரு நூற்றாண்டாகவே இருந்து வந்திருந்தாலும் கடந்த முப்பது ஆண்டுகளாக, இந்த மதவெறிக் கும்பல்தான், மதக்கலவரத்தைத் தூண்டும் வகையில் இதனைக் கையாண்டு வருகிறது. 2026 சட்டமன்றத் தேர்தலில் சில தொகுதிகளிலாவது வெற்றிபெற வேண்டும் என்ற வெறியில், அதிகார வர்க்கத்தில் ஊடுருவியிருக்கும் சங்கிகளைப் பயன்படுத்தி, தற்போது தனது கலவரத் திட்டத்தை விரைவுபடுத்துகிறது. அதன் சிறு அங்கமாகத்தான் கடந்த இரண்டு மாத காலமாக, மதுரையில் மதவெறியூட்டும் நடவடிக்கைகளை அரங்கேற்றி வருகிறது.

### மலை யாருக்கு சொந்தம்?

திருப்பரங்குன்றம் மலையில் சொத்துரிமை தொடர்பான பிரச்சினை, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே எழுப்பப்பட்டது. 1920-ஆம் ஆண்டு இரயில்வே பாதைகள் அமைக்கவும் குவாரிகள் அமைக்கவும் திருப்பரங்குன்றம் மலையைக் கையகப்படுத்தும் முயற்சிகளை பிரிட்டிஷ் அரசின் வருவாய்த்துறை மேற்கொண்டது. இதற்கு எதிராக, திருப்பரங்குன்றம் முருகன் கோயில் தேவஸ்தானம் கீழமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அந்த வழக்கில் தர்கா நிர்வாகமும் மனுதாரராக இணைக்கப்பட்டது.

### 1923-ல் வழக்கு

கீழமை நீதிமன்றத்தின் முதன்மை கூடுதல் நீதிபதியாக இருந்த பி.ஜி. இராம ஐயர் 300-க்கும் மேற்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்து, 21 சாட்சிகளை விசாரித்தார். 25-08-1923 அன்று அவர் வழங்கிய தீர்ப்பில், நெல்லித்தோப்பு, அதில் உள்ள புதிய மண்டபம், நெல்லித்தோப்பிலிருந்து பள்ளிவாசல் வரை உள்ள படிக்கட்டுகள், பள்ளிவாசல் மற்றும் கொடிமரக் கம்பம் ஆகியவை இஸ்லாமியர்களின் சொத்தாகும் எனவும், மலையின் பிற பகுதிகள் மற்றும் கிரிவலப் பாதை, முருகன் கோயில் தேவஸ்தான நிர்வாகத்திற்குச் சொந்தமானவை எனவும் குறிப்பிடப்பட்டது.

> மதுரையில் பாஜக ஜூன் 22 அன்று முருகன் அரசியல் மாநாடு ஒன்றுக்கு திட்டமிட்டுள்ளது திருப்பரங்குன்றத்தில் இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாக நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வருகிறார்கள் அங்கே இந்து முஸ்லீம் பகைமையை உருவாக்கி மதக் கலவரத்தை உருவாக்குவது இந்த மாநாட்டின் நோக்கம்.
>
> அங்கே இருக்கிற தர்காவை அகற்ற வேண்டும் என்பதற்காகவே இந்த மாநாடு நடைபெறுகிறது மதுரையில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா திருப்பரங்குன்றத்தை சிக்கந்தர் மலையாக மாற்ற திமுக ஆட்சி முயற்சிக்கிறது என்றும் அதை முறியடிக்க வேண்டும் என்றும் மதவெறியை தூண்டும் வகையில் பேசி இருக்கிறார் உண்மையில் திருப்பரங்குன்றத்தில் என்ன நடக்கிறது, அதன் வரலாறு என்ன...

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அது வருவாய்த்துறைக்குச் சாதகமாக முடிந்ததாகக் கூறப்படுகிறது. இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து, அன்றைய உச்சநீதிமன்றமான இலண்டனில் உள்ள பிரிவி கவுன்சிலில் (Privy Council) 25-08-1923 அன்று மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில், பி. வி. இராம ஐயர் வழங்கிய தீர்ப்பினை உறுதிப்படுத்தி, 12-05-1930 அன்று உத்தரவு வழங்கப்பட்டது.

அதன் பின்னர், தர்காவில் வழிபாடு நடத்தவும், உணவு சமைப்பதற்கும் தேவையான நீரை சிவன் கோயில் (காசி விசுவநாதர் கோயில்) சுனையில் இருந்து எடுத்துப் பயன்படுத்தி வந்தனர். கோடைக்காலங்களில் நீரின் அளவு குறைவதால், இருதரப்பினருக்கும் இடையே சிறு மோதல்கள் ஏற்பட்டு வந்தன. இதனால், தர்கா நிர்வாகம், தர்காவிற்குச் சொந்தமான இடத்திலேயே சுனை கட்டும் பணியை மேற்கொண்டது.

இதை எதிர்த்து, சுனை கட்டுமிடம் கோயில் நிர்வாகத்திற்குச் சொந்தமானது என அறிவிக்கக்கோரி, கோயில் நிர்வாகம் சார்பாக 1975-ஆம் ஆண்டு மதுரை மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி கே. சுப்பிரமணியன், முந்தைய 1920-ஆம் ஆண்டு பி.ஜி. ராம ஐயர் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், வழக்கில் குறிப்பிடப்பட்ட இடம் தர்காவிற்கே சொந்தமானது எனவும், சுனை கட்ட தடை போட முடியாது எனவும் 22-11-1978 அன்று தீர்ப்பளித்தார். மேற்கண்ட அனைத்து வழக்குகளிலும், திருப்பரங்குன்றம் கோயில் நிர்வாகம் தர்காவிற்குச் சொந்தமான இடங்களைக் கோயிலுக்கு சொந்தமானவை என அறிவிக்க முயன்றது. ஆனால், அனைத்துத் தீர்ப்புகளும் தர்கா நிர்வாகத்திற்கு ஆதரவாகவே வந்துள்ளன.

ஆனால், 1931-ஆம் ஆண்டு லண்டன் பிரிவி கவுன்சிலின் தீர்ப்பில் முழு மலையும் முருகனுக்குச் சொந்தமானது என்று கூறப்பட்டதாக எச்.ராஜா உள்ளிட்ட சங்கிகள் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

### திருப்பரங்குன்றம் தமிழ்நாட்டின் அயோத்தியா?

இந்தியாவின் தொல்லியல் அடையாளங்களில் ஒன்றாக இருந்த பாபர் மசூதி, 1992-ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது. இராமன் அங்கு பிறந்தார், அவ்விடத்தில் இராமன் கோயில் இருந்தது என்ற பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டமைத்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல், கரசேவை நடத்தி மசூதியை இடித்தது.

இதையே முன்மாதிரியாக வைத்து, நாடுமுழுவதும் இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களுக்கு எதிரான பிரச்சாரங்களைத் தொடங்கின சங் பரிவார் கும்பல். திருப்பரங்குன்றம் மலையும் இப்போது அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவேதான், "திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்றுவோம்" என்று எச்.ராஜா திமிர்த்தனமாகப் பேசித் திரிகிறார்.

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு மேலே, 50 அடி உயரத்தில் 300 ஆண்டுகள் பழமையான தீபமேற்றும் பீடம் உள்ளது. தமிழ்நாடு முழுவதுமிருந்து வரும் பக்தர்கள் அங்கு தீபம் ஏற்றி வழிபடுகின்றனர். ஆனால், "தர்காவிற்குச் சொந்தமான கொடிமரம் அமைந்துள்ள பகுதியில்தான் தீபம் ஏற்றவேண்டும், அது இந்துக்களின் நம்பிக்கை" என்று கூறி, ஆர்.எஸ்.எஸ்-இன் வானரப்படைகளில் ஒன்றான "இந்து பகத் சன சபை"யின் தலைவர் வி.தியாகராஜன் சார்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் 1994-இல் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி ஜெ. கனகராஜ், 1930-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பே இறுதியானது என்றும், எந்தவித அசம்பாவிதங்களும் நடைபெறாத வண்ணம் இந்தப் பகுதியின் பாதுகாப்பை காவல்துறை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் 24-11-1994 அன்று உத்தரவிட்டார்.

இதையெல்லாம் மதிக்காத பாசிச கும்பலோ, கொடிமரம் அமைந்துள்ள பகுதியில் தீபம் ஏற்ற வேண்டும் என்று இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பை, அப்பகுதி மக்களிடையே விதைக்க முயற்சித்து வருகிறது. அண்மையில் கூட, செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், "1931-ஆம் ஆண்டு தீர்ப்பின்படி, தர்கா அமைந்துள்ள 33 சென்ட் இடம் மட்டுமே தர்காவிற்குச் சொந்தமானது. கோயிலுக்குச் சொந்தமான இடத்திலுள்ள (தர்கா) கொடிமரத்தில் தீபம் ஏற்றுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். கடந்த 30 ஆண்டு காலமாக இந்துக்களின் உரிமை பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது" என்று பேசியிருக்கிறார்.

கடந்த 2013-ஆம் ஆண்டு, நெல்லித்தோப்பு பகுதியில் தொழுகையைத் தடைசெய்யக் கோரி இந்து மக்கள் கட்சி சார்பில், உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டது. தொழுகை செய்வதைத் தடுக்க முடியாது எனவும் அந்த வழக்கில் எவ்வித இடைக்காலத் தடை உத்தரவும் பிறப்பிக்க இயலாது எனவும் 27-06-2023 அன்று நீதிபதிகள் கூறிவிட்டனர்..

இவ்வாறாக, 1920 முதல் 2023-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பல்வேறு வழக்குகளில் சிக்கந்தர் தர்கா, பள்ளிவாசல், கொடிக்கம்பம் அமைந்துள்ள மலையுச்சி, நெல்லித்தோப்பு உள்ளிட்ட பகுதிகள் இஸ்லாமியர்களுக்குச் சொந்தமானது என்பது சட்டரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆதாரங்களையும் தீர்ப்புகளையும் மதிக்காமல், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கும்பல் இஸ்லாமியர்களுக்கு எதிரான அவதூறான பரப்புரையைத் திட்டமிட்டே செய்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாகத்தான், சிக்கந்தர் தர்காவில் ஆடு, கோழிகளே இதுவரை பலியிடப்படாதது போலவும், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில்தான் இஸ்லாமியர்கள் வேண்டுமென்றே பிரச்சினை செய்வதாகவும், முருகன் மலையை சிக்கந்தர் மலையாக்க முயற்சிகள் நடப்பதாகவும் கதையளந்து, கலவரம் நடத்த முயற்சிக்கிறது இந்து முன்னணி கும்பல்.

### எந்த புகாரும் இல்லை

கடந்த டிசம்பர் 26-ஆம் தேதி டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய அரிட்டாபட்டியைச் சேர்ந்த மக்கள், டங்ஸ்டன் திட்டம் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேர்த்திக்கடன் செலுத்த, கிடா வெட்டுவதற்காக சிக்கந்தர் தர்காவிற்குச் சென்றனர். அப்போது அங்கு கிடா வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறி, திருப்பரங்குன்றம் போலீசால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவ்வாறு சென்ற மக்கள் இஸ்லாமியர்கள் அல்ல, இந்துக்கள்தான். எனவே, திருப்பரங்குன்றம் மலையில் சிக்கந்தர் தர்கா அமைந்திருப்பது பற்றியோ, அங்கு பலியிடுவது பற்றியோ அப்பகுதி இந்து மக்கள் யாரும் புகார் அளித்ததில்லை. இந்து மக்களும் இணைந்தே அங்கு வழிபாடு நடத்தி வந்துள்ளனர் ஆனால், இந்துக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் இந்து முன்னணி-பா.ஜ.க. கும்பலானது அயோத்தியில் கலவரம் செய்து பாபர் மசூதியை இடித்ததைப் போல, திருப்பரங்குன்றத்திலும் அரங்கேற்ற வேண்டுமென 30 ஆண்டு காலமாக வெறிகொண்டு அலைகிறது. ஆனால், இந்து - இஸ்லாமிய மக்களின் மதநல்லிணக்கத்தை அக்கும்பலால் உடைக்க இயலவில்லை. இத்தகைய ஒற்றுமைதான் இந்துத்துவப் பாசிஸ்டுகளின் தாக்குதல் இலக்காக இருக்கிறது. அதைத் தகர்ப்பதன் ஊடாகவே தமிழ்நாட்டில் வேரூன்ற முடியும் என்பதை உணர்ந்து, வாய்ப்புகளுக்காக அலைந்து கொண்டிருக்கிறது.

**- நன்றி புதிய ஜனநாயகம் மாத இதழ்**

# சென்னை, கோவையில் கலந்துரையாடல் கூட்டங்கள்

சென்னை: மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 07.06.2025 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

மறைந்த கழகத் தோழர் இசைக் கலைஞர் அருண் படத் திறப்பு நிகழ்வு நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தொடர்ச்சியாக கழகம் முன்னெடுத்த பிரச்சார கூட்டங்களையும், இளைஞரணி, நிமிர்வோம் வாசகர் வட்டம், மாணவர் கழக செயல்பாடுகளையும் பட்டியலிட்டு கருத்துரையாற்றினார்.

மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் கழகத் தோழர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அவற்றை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் பேசினார். தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு ராஜேந்திரன், அருண் கோமதி, புருஷோத்தமன், தினகரன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பேரன்பு, தேன்மொழி, இரண்யா, பிரசாந்த், சிரிஜன், மகிழவன், நந்தகுமார், ஹர்ஷா ஆகியோர் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

மேலும் கழக வார இதழான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா சேர்ப்பது பற்றியும், 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகம் நடத்திவரும் நமது இதழுக்கு ஒரு விழா எடுக்கலாம் என்ற கோரிக்கையை பற்றியும் பல தோழர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் தோழர்கள் அருண், ரவீந்திரன் ஆகியோர் தங்களைக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கழக வெளியீடுகளை வழங்கி கழகத் தலைவர் அவர்களை வரவேற்றார்.

சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பாக இணையதளக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. சேத்துப்பட்டு இராசேந்திரன் தனது இணையர் அலமேலுவின் மணிவிழாவை முன்னிட்டு ரூ.1000 கழக வளர்ச்சி நிதியாக கழகத் தலைவரிடம் வழங்கினார். 45க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 4வது பக்கத்தில்...)

# பேரன்பும் பெருங்கோபமும்

தங்கர்பச்சான் தயாரிப்பில் வெளிவந்துள்ள ‘பேரன்பும் பெரும்கோபமும்’ திரைப்படம் ஜாதி பெருசா? சாமி பெருசா? என்ற முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ளது. மிகுந்த ஆழமான கேள்வியும் கூட இது. உண்மையில் சாமியை விட ஜாதிதான் பெரிது. அதைத்தான் இப்படம் பேசுகிறது. இதற்கு படம் தேர்ந்தெடுத்திருக்கும் கதைக் கரு வழக்கத்தில் இருக்கும் முத்தாலம்மன் கதை.

முத்தாலம்மன் தென்மாவட்டம் முழுவதும் வழிபடக்கூடிய தெய்வமாகும். முத்தாலம்மன் உயர்குடி ஜாதியைச் சேர்ந்தவள். தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த ஒருவனை காதலித்து ஊரை விட்டு ஓடிவிடுகிறாள். வெளியூரில் திருமணம் முடித்து குழந்தைகளோடு வாழ்ந்து வருகிறாள். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவள் வாழும் இடம் தெரிந்து சக்கரையாக பேசி ஊருக்கு அழைத்து வருகிறார்கள். ஊர்க்காரர்களின் பேச்சை நம்பி வந்த முத்தாலம்மன் கணவன் குழந்தைகளோடு சேர்த்து படுகொலை செய்யப்படுகிறாள்.

இன்னும் அந்த சம்பவத்தை நிகழ்த்திக் காட்ட திருவிழாக்களின் போது படுகளம் போடுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் விரதமிருந்து படுகளத்தில் கழுகுமரம் ஏறுவதும், செத்தவர்கள் போல படுத்து கிடக்க, அந்த சமூகத்தினர் ஒப்பாரி வைத்து அழுவதும், பிறகு திருநீறு போட்ட பின்பு உயிர்த்தெழுவதும் முத்தாலம்மனையும் அவள் கணவன் குழந்தைகளை கொன்றது போன்று நடத்திக் காட்டும் நிகழ்த்துக் கலையாகும்.

இப்படத்தில் காட்டப்படுவது போன்று என்னதான் முத்தாலம்மனை சாமியாக ஏற்றுக்கொண்டாலும், ‘என்னதான் இருந்தாலும் நீ தாழ்த்தப்பட்டவனைத் திருமணம் செய்து கொண்டவள்தானே’ என்ற வன்மம் இன்றும் தொடர்கிறது. திருவிழாவிற்கு முத்தாலம்மனுக்கு மண் சிலை செய்து, திருவிழா முடிந்ததும் அந்தச் சிலையை ஊரைவிட்டு நீண்டதூரம் தள்ளிப் போட்டுவிட்டு வந்துவிடுவார்கள். இதுபோல ஜாதி மாறி திருமணம் செய்தவர்களை கொன்று சாமியாக்கிய நிறைய கடவுள்கள் இங்கு உண்டு. மதுரைவீரன், காத்தவராயன் போன்ற நிறைய கடவுள்களை சொல்லமுடியும். இவை பற்றி ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியம் விரிவாக எழுதியிருக்கிறார். வேற்று சமூகத்தில் பிறந்து காதலித்ததில், இவர்கள் கொலை செய்யாமல் விட்டது முருகனையும் வள்ளியையும் மட்டும்தான். முருகன் காதலித்த காலத்தில் ஜாதி இல்லாமல் இருந்ததால் தப்பித்தார்.




இப்போது பார்க்கிறோமே! “சத்தியம் சத்தியமே! கலியாணம் பண்ணிக்குவோம் கவுண்ட வீட்டு பையனையே” என்று பெண்களிடம் சத்தியம் வாங்குகிறார்களே. ஆனால் ஆடுவதோ வள்ளிக்கும்மி. அந்த வள்ளி இப்போது காதலித்திருக்க வேண்டும்.

19-ஆம் நூற்றாண்டு இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலும் நிறைய ஜாதி சங்கங்கள் உருவாகின. பறிக்கப்பட்ட தங்களுடைய உரிமைகளுக்கும், முன்னேற்றத்திற்கும் அச்சங்கங்கள் குரல் எழுப்பின. பெரியாரும் நிறைய ஜாதிச் சங்க மாநாடுகளில் பேசியிருக்கிறார். அந்த மேடைகளிலே அவர்களேயே விமர்சித்தும் இருக்கிறார். ஆனால் இப்போது இருக்கிற ஜாதிச் சங்கங்கள் ஆண்ட பரம்பரை வசனம் பேசி இளைஞர்களிடம் ஜாதிவெறியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன.

தாழ்த்தப்பட்ட ஜாதியில் உதித்த தெய்வங்களை ஏற்றுக்கொள்ளும்போது அந்த தெய்வத்தின் அப்பனையே மாற்றிவிடுகிறார்கள். இங்கு பெற்ற தாய் எந்த ஜாதி என்பதைவிட அந்த தெய்வத்தின் தகப்பன் எந்த ஜாதி என்பதே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தெய்வமாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவரின் விந்துக்குப் பிறந்த தெய்வம் என்பதை அவர்கள் மனம் ஒப்ப மறுக்கிறது.

இப்படத்தில் ஊர்த் திருவிழாவிற்கான கூட்டம் மந்தையில் நடக்கிறது. உன்னிடம் திருவிழாவிற்குத் தலைக்கட்டு வரி வாங்க மாட்டோம் என்று சொல்லுவது திருப்புமுனைக் காட்சியாக அமைகிறது. திருவிழாவிற்கு வரி வாங்கமாட்டோம் என்பது சமூக ஒதுக்கல் ஆகும். தம்மிடம் வரி வாங்காமல் இருப்பதை சம்பந்தப்பட்டவர்கள் அவமானமாகக் கருதுகிறார்கள். எனது பக்கத்து ஊரில் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேற்று சமூகத்தில் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள்.

ஊர்க்காரர்கள் அவர்களிடம் திருவிழாவிற்கு வரி வாங்குவதில்லை என்று தீர்மானித்தார்கள். பிரச்சனையாகி காவல்நிலையம், கலெக்டர் அலுவலகம் வரை சென்றது. திருவிழாவில் மட்டுமல்ல, அவர்களிடம் தண்ணீர் கூட வாங்கிக் குடிக்காமலும், சாடை பேசியும், சமூக ஒதுக்குதல் செய்தும் அந்த குடும்பத்தையே மன உளைச்சலுக்கு ஆளாக்கிவிடுவார்கள்.

சாமியை விட பெரிது ஜாதிதான். அதனால் தான் அந்த சாமியைத் தொட எல்லா ஜாதியும் கருவறைக்குள் இன்றுவரை போக முடியவில்லை. இப்படத்தில் ‘திருவிழா கூட நடத்தாமல் இருப்போமே ஒழிய உன்னிடம் வரி வாங்க மாட்டோம்’ என்கிற வசனம் வரும். அட! மதம் மாறி இங்கு சாமியை மாற்றிக்கொண்டாலும் ஜாதி போகவில்லை. ஆக சாமியை விட ஜாதிதான் பெரிது. சாமிக்கு ஜாதியை திணித்ததால்தான் சாமியே இல்லை என்று பேசும் நிலை வந்தது என்ற கூர்மையான கருத்து படத்தில் வசனமாக வருகிறது. அதுதான் நிஜத்திலும் நடக்கிறது.

இன்று வரை கிராமங்களெங்கும் மதுரைவீரன், முத்தாலம்மன், வள்ளி திருமணம் போன்ற நாடகங்கள் திருவிழாவின் போது நடந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த நாடகங்களை பார்க்கக் கூடியவர்கள் சாதிய எண்ணத்திலேயே தான் இருக்கிறார்கள். அந்த நாடகங்களை பார்ப்பவர்கள் “அடப்பாவிகளா! ஜாதி மாறி கலியாணம் பண்ணுனா இப்படியா அநியாயமா கொல்லுவீங்க” என்று கேட்பதில்லை. வேறு ஜாதியில் காதலித்தால் கொலை செய்வது தவறு என்ற கருத்தை அந்த நாடகங்கள் ஏற்படுத்துவதில்லை.

காலம் காலமாக அந்த நாடகங்களைப் பார்ப்பவர்களுக்கும் ஜாதி தவறு என்ற எண்ணம் வரவில்லை. மாறாக வள்ளித் திருமணம் நாடகம் பார்த்தவன், வள்ளி கும்மியை ரசித்தவன்தான் காதலித்தால் கொலை செய்கிறான். அப்படி கொலை செய்து தண்டனை பெற்ற குற்றவாளியைக் கூட மாவீரனாக கொண்டாடும் கேவலத்தை எல்லாம் பார்க்கிறோமே!

நாட்டார் கதையை கருவாக எடுத்து கதையை சொல்லக் கூடிய விதத்தில் சொல்லி, ‘ஜாதியென்பது அசிங்கமானது’ என்ற கருத்தை இப்படம் ஏற்படுத்தியுள்ளது. இன்னும் சாமியை விட ஜாதிதான் பெரிது என்பதும், ஜாதி பிறப்பில் இல்லை வளர்ப்பில்தான் இருக்கிறது, ஏனென்றால் கடவுளே மாற்றமுடியாத ஒருவரின் ஜாதியை மருத்துவமனை செவிலியர் மாற்றிவிட முடியும் என்ற அரசியல் கருத்தையும் இப்படம் பேசுகிறது.

**–ம.சரவணகுமார்.**

# பாமக, அதிமுகவின் இனத் துரோகங்கள்!

தமிழர்களுக்காக போராடி சிறை சென்று தியாகத் தழும்புகளை ஏற்ற இரண்டு தலைவர்கள் தமிழ்நாட்டைக் காப்பாற்ற இப்போது களம் இறங்கி இருக்கிறார்கள்.

அந்த இரண்டு தலைவர்களுக்கும் நீங்கள் வந்துதான் எங்களை காப்பாற்ற வேண்டும் என்று பச்சைக்கொடி காட்டிக் கொண்டு நிற்கின்றன சில அரசியல் கட்சிகள்.

அந்த இரண்டு தலைவர்கள் யார் தெரியுமா? ஒருவர் அமித்ஷா; மற்றொருவர் ஆடிட்டர் குருமூர்த்தி. உள்துறை அமைச்சராக இருந்த அத்வானியை மறதி மனநோய்க்காரர் "செலக்ட்டிவ் அம்னீசியா" என்று துணிச்சலாகக் கூறினார் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா

அந்த ஜெயலலிதாவின் தொண்டர்களை நீங்கள்தான் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று இப்போது உள்துறை அமைச்சராக இருக்கும் அமித் ஷா-விடம் மன்றாடி மனு போட்டுக் கொண்டிருக்கிறார் தினகரன்.

ஜெயலலிதாவின் படத்தை அவர் உயிருடன் இருக்கின்ற வரை சட்டையிலும், பேனாவிலும் சொருகிக்கொண்டு இருந்தவர்கள் இவர்கள்தான். தமிழ்நாட்டில் அமையப்போவது பாஜக கூட்டணி ஆட்சிதான் என்று அடித்துச் சொல்லி எடப்பாடியை வாய் மூட வைத்து விட்டார் அமித் ஷா.

அதிமுக ஆட்சிதான் அமையப்போகிறது என்று அவ்வப்போது உச்ச கட்டையில் பேசிக்கொண்டிருக்கும் எடப்பாடிக்கு, இனிமேல் அப்படிப் பேசினால் என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொள் என்று மதுரை கூட்டத்தில் எச்சரிக்கை செய்துவிட்டு போயிருக்கிறார் அமித் ஷா.

பார்ப்பனர்களைக் கட்சியிலே சேர்க்க மாட்டோம் என்று சொன்ன மருத்துவர் ராமதாஸ், ஆடிட்டர் குருமூர்த்தி இடம் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பத்திரிகையாளர்களிடம் துப்பறியும் நாவலைப் போல் விறுவிறுப்பான கதைகளைப் பேட்டியாக அளித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டு அரசியலைப் பார்ப்பனர்களிடமும், பனியாக்களிடமும் ஒப்படைத்துவிட்டு வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக தமிழர் உரிமைகளைப் பலிக்கடாவாக்கத் துடிக்கின்றன இனத் துரோக சக்திகள்.

தமிழ்நாட்டு மக்கள் இந்த துரோகங்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## திராவிடம் வென்றே தீரும்!

பாமகவை மருத்துவர் ராமதாஸ் தொடங்கியபோது பார்ப்பனர்களைக் கட்சியில் சேர்க்க மாட்டேன் என்று கூறினார்.

**இப்போது பாமகவில் நடக்கும் குடும்பச் சண்டையை தீர்த்து வைக்க ராஜகுரு குருமூர்த்தி களம் இறக்கப்பட்டுள்ளார்.**

தமிழ்நாட்டு மக்களுக்கு குருமூர்த்தி யார் என்று தெரியாது, ஆனால் அவர்தான் பாஜகவின் அதிகார மய்யம். அதிமுகவை இரண்டாக உடைத்ததில் இவரது பங்கு மிகவும் பெரியது.

ஓ.பன்னீர்செல்வத்தை தர்மயுத்தம் செய்ய உத்தரவிட்டவர் இதே ஆடிட்டர்தான். **அதிமுகவினர் ஆண்மையற்றவர்கள்; காலில் விழக்கூடியவர்கள்** என்று அவமானப்படுத்தினார்.

ஒரு வழியாக எடப்பாடியின் அதிமுக பாஜகவின் பிடிக்குள் வந்துவிட்டது. தினகரன் ஓபிஎஸ் குழுக்கள் பாஜகவின் உத்தரவுக்காகக் காத்துக் கிடக்கின்றன.

**இப்போது பாமகவும் பாஜக பிடிக்குள் போகிறது.** தமிழ்நாட்டில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சியை எப்படியாவது ஒழித்தாக வேண்டும் என்று தலைகீழாக நின்று தண்ணீர் குடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பாஜகவில் இருக்கும் "சூத்திர" அண்ணாமலைகளோ, நயினார்களோ, தமிழிசைகளோ சாலை ஓரத்தில் கூவுவதற்குத்தான் உரிமை. ஆனால் கட்சியின் அதிகாரம் மக்களுக்கே தெரியாத ஆடிட்டர் குருமூர்த்தியிடம்தான்.

உண்மையில் சொல்லப் போனால் இப்போது நடப்பது ஆரிய திராவிடப் போராட்டம்தான் இதில் நிச்சயம் திராவிடம் வென்றே தீரும்.

**விடுதலை இராசேந்திரன் 05.06.2025**
**முகநூல் பதிவு.**

## பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதி!


தோழர் மடத்துக்குளம் மோகன் குடும்பத்தினர் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.3000/ கழகப் பொருளாளர் சு.துரைசாமி அவர்களிடத்தில் வழங்கினார்கள். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

# நாத்திக விழா சிந்தனை(2)

## நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்

***1967 மே 24 விடயபுரத்தில் நடந்த பயிற்சி வகுப்பில் கடவுள் மறுப்பு வாசகங்களை பெரியார் உருவாக்கினார். அதில் அந்த வாசகங்களை விளக்கி பெரியார் எழுதிய கட்டுரையைக் கடந்த இதழில் வெளியிட்டு இருந்தோம். இதுகுறித்து மறைந்த பேராசிரியர் இராமநாதன் அவர்கள் எழுதிய கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம்.***

கடவுளை வணங்குகிறவர்களைக் காட்டுமிராண்டிகள் என கடுமையான சொற்களைப் பயன்படுத்தியவர் பெரியார் அதற்கான காரணம் என்ன தெரியுமா....



**கடவுள் என்றால் என்ன, அவர் எப்படி இருப்பார், எதற்காக இருக்கிறார். ஏன் இருக்கிறார், அவர் சக்தி எவ்வளவு, நம் சக்தி எவ்வளவு, அவரால் ஏற்பட்டது எது, நம்மால் ஏற்பட்டது எது, எது எதை அவருக்கு விட்டுவிடலாம், எது எது நாம் செய்ய வேண்டியது, அவரில்லாமல் ஏதாவது காரியம் நடக்குமா, எதையாவது செய்யக் கருதலாமா?**

**நான் இதை அறுபது எழுபது ஆண்டாக சிந்தித்து சிந்தித்து அறிவு ஆராய்ச்சி அனுபவத்தில் கண்டுகொண்ட உறுதியினால் கூறுகிறேன். முதலில் நாத்திகன் ஆகுங்கள், நாத்திகம் என்பது அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் கொண்டு தெளிவடைவதுதான். இத் தெளிவு அடைந்த இடத்தில் இம்மூன்றும் கடவுள், மதம், சாத்திரம் தலைகாட்டாது.**

**புதுச்சேரியில் 12.08.1962 இல் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டுப் பேருரையில் பெரியார் விடுதலை 17.08.1962.**

காட்டுமிராண்டி மக்களுக்கும், மற்ற மக்களுக்கும் என்ன வேறபாடு? எல்லோரும் மக்கள்தான். பொது இயல்பில் வேறுபாடில்லை.

நடைமுறையில் வேறுபாடு உண்டு. காட்டுமிராண்டி மக்கள் வாழ்வில் அறிவொடுபட்ட செயல்முறைகள் இல்லை. மானம் இல்லாதவர். அறிவும் மானமும் இல்லாமல் விலங்கொடு விலங்காக வாழ்பவர்.

மனிதனுக்கு மற்ற உயிரினங்களைவிடப் பகுத்தறிவு இருக்கின்றது. அந்த அறிவைக்கொண்டே மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு உலகில் முன்னேறியிருக்கின்றான். ஆயினும் அவன் தன்னுடைய பகுத்தறிவைக் கொண்டு முன்னேற முடியாமல் கடவுள் கருத்தும்,இதனை ஒட்டி எழுந்துள்ள கற்பனைகளும், தடை செய்துவிட்டன. மனிதன் எவ்வளவோ முன்னேறியிருந்தாலும் மனித இனத்தில் குறிப்பிடத் தகுந்த அளவுள்ள மக்கள் இன்னும் மக்களுக்கு இன்றியமையாது வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்து கொள்ள முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள். எண்ணற்ற உயிரினங்களைத் தன்பால் கொண்ட உலகத்தில் பசியாலும், பட்டினியாலும் சாவது மக்கள் உயிர் மட்டுமே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியவராக இருக்கின்றோம். அறிவைப் பயன்படுத்தவிடாமல் கடவுள் கொள்கையை நம்பிக்கையை வளர்த்துவிட்டார்கள். இதனால் சிந்திக்கும் திறனை மனிதன் இயல்பில் இழந்தவன் ஆகின்றான். அறிவிருந்தும் காட்டுமிராண்டியாக வாழ்கின்றான்.
இதற்குப் பெரியார் சொல்லும் ஓர் எடுத்துக்காட்டை இங்குக் காட்டி விளக்குகின்றேன்.

ஓர் ஊரில் ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து மாணவர்கட்கு வேண்டிய படிப்பைச் சொல்லி கொடுத்துக்கொண்டிருந்தார்.

அந்த ஆசிரியருக்குத் துணி தைக்க ஓர் ஊசி வேண்டியிருந்தது. அவர் ஊசி ஒன்றை வாங்கி வரவேண்டும் என்று பொதுவாகச் சொன்னார். ஒரு மாணவன் எழுந்து நான் போய் வாங்கி வருகின்றேன் என்று கூறினான். அவனுடன் வேறு சிலரும் போய் வருவதாகக் கேட்டுக் கொண்டனர். எல்லோரும் போய் வாங்கிக் கொண்டு வந்து சேருங்கள் என்றார். எல்லோரும் போய் ஊசியை விலைக்கு வாங்கினர். அதனை ஒரு பையன் வாங்கிக் கையில் வைத்துக் கொண்டான். மற்ற மாணவர்கட்கு அவன்மேல் கோபம் வந்தது. நீ மட்டும் ஊசியைக் கொண்டுபோய்க் கொடுப்பதா? எல்லோருக்கும் அதில் பங்கு வேண்டாமா என்று கேட்டு வம்பு செய்தார்கள்.

பக்கத்தில் ஒரு பனை மரத்துண்டு கிடந்தது. அந்த பனைமரத் துண்டில் ஊசியை குத்திவைத்து எல்லோரும் மிக்க சங்கடப்பட்டுக் கொண்டு போய் இறக்கினார்கள். ஆசிரியர் எல்லோரும் ஏன் இப்படித் தூக்கிக் கொண்டு வந்து சங்கடப்பட்டீர்கள்? என்று கேட்க, எல்லோரும் ஊசி வாங்கிக்கொண்டு வந்ததில் பங்கிருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்தோம் என்றார்கள்.

இப்படிச் சொல்லிக்கொண்டே பனை மரத்துண்டில் அழுத்தி வைத்த ஊசி எங்கே என்று தேடினர். ஊசியைக் காணோம்.'

அந்த ஆசிரியர் சொன்னார். அட! மடப்பசங்களா! அந்த ஊசியை அந்த மரத்தில் வைத்துக் கட்டித் தூக்கிக்கொண்டு வருவதுதானே? ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று சினந்து கொண்டாராம்.

இந்தக் கதையைக் கேட்டவுடன் உங்கட்கு மாணவருக்கும் ஆசிரியருக்கும் இருந்த அறியாமையை நினைத்து சிரிப்பு வருகின்றது. நாட்டில் நடைமுறையில் கடவுள் பெயரால் இதனைப் போன்று நடக்கும் மடத்தனத்தை யாவரும் கண்டு சிரிக்கவில்லை. சிரிக்காததோடு இந்த மடத்தனத்தை இப்போதும் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கின்றார்கள். அது என்ன?

ஊரிலுள்ள பெரிய மரங்களை வெட்டி நூற்றுக்கணக்கான தச்சர்களை வைத்துப் பெரிய தேர் செய்து ஒன்றரை அடி அல்லது இரண்டடி உள்ள அய்ம்பொன்னால் செய்த சாமிச் சிலையை வைத்து ஆயிரக்கணக்கான மக்கள் கூடி பெரிய வடம் பிடித்து அந்தத் தேரை இழுக்கின்றார்களே! இது எவ்வளவு பெரிய மடத்தனம்?

அந்த ஒன்றரை அல்லது இரண்டடிச் சாமியை ஓர் ஆள் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு உலாவரலாம். அது ஒன்றும் சங்கடமன்று. முடியாததும் அன்று. அப்படியிருக்கத் தேரில் வைத்து இழுப்பதன் கருத்து என்ன? சாமி சிலையை ஒருவன் தூக்கிக் கொண்டு ஊர் சுற்றி வந்தால், அவ்வாறு தூக்கிக்கொண்டு ஊரார் சுற்றியதால் கிடைக்கும் நல்ல பயன்கள் அந்த ஒரு மனிதனுக்கே போய்விடும். சாமியைத் தூக்கிக்கொண்டு ஊர் சுற்றும் புண்ணியம் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கிடைக்கவேண்டுமானால் இதுபோலப் பெரிய தேர் செய்து இழுத்தால் எல்லாருக்கும் கிடைக்கும். இதற்காகவே தமிழகக் கோயில்தோறும் தேரோடும் திருவிழா நடக்கின்றது.

ஊசியைக் கையில் வாங்கிக்கொண்டு வராமல் எல்லோருக்கும் பங்கு வேண்டும்என்று பனை மரத்துண்டில் செருகித் தூக்கிக் கொண்டு வந்த முட்டாள் மாணவர்கட்கும். தேரில் சாமியை வைத்து இழுக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்கட்கும் என்ன வேறுபாடு? சிந்தித்துப் பாருங்கள்.

இப்படியுள்ள மக்களை அல்லது பக்தர் கூட்டத்தைக் காட்டு மிராண்டி மக்கள் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லுவது என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

இவர்களிடத்தில் அறிவிருக்கின்றது என்பதற்கு ஏற்ற அடையாளம் இருக்கின்றதா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தேரில் ஒன்றரையடி அல்லது இரண்டடிச் சாமியை ஏற்றிவைத்து, ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி அந்தத் தேரை இழுத்துக்கொண்டு வீணாகத் தொலைப்படும் இந்த மனிதக் கூட்டத்துக்கு அறிவிருக் கின்றது என்று கூறமுடியுமா? இவர்கள்தான் உண்மையான காட்டுமிராண்டிகள்.

அடுத்து இந்த நாட்டில் எவ்வளவோ கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு எல்லாம் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு ஆண்டுதோறும் பக்தர்கள் செலுத்தும் காணிக்கை கோடிக்கணக்கில் வருகின்றன. இந்தக் கோயில்களைக் கட்டியவர்களும் மானியம் விட்டவர்களும் கோயில்களுக்குக் கோடிக்கணக்கில் காணிக்கைக் குவிப்பவர்களும் தமிழின திராவிட மக்களே ஆவர்.

இவ்வளவும் செய்த மக்களை ஒன்றுமே செய்யாத பார்ப்பனப் புல்லுருவிக் கூட்டம் 'சூத்திரர்' என்ற இழிந்த பொருளைக் கொடுக்கும் சொல்லை அவர்கட் குரியதாக்கி, அவர்கட்குக் கோயில்களில் பூசகராக வரும் உரிமை கிடையாது என்று பேசி ஊர் தெரியாத யார் யாரோ எழுதி வைத்த வேதம் சாஸ்திரம், புராணம் முதலிய ஆதாரங்களைக் காட்டித் தடுக்கின்றார் என்றால், அதனையும் சகித்துக் கொண்டு மேலும் பக்தர்களாகப் பார்ப்பனருக்குக் கொத்தடிமைகளாகத் திராவிட மககள் வாழ்கின்றார் என்றால் இவர்கட்கு மானம் இருக்கின்றதா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஆகவேதான் அறிவும், மானமும் அற்று விலங்குகளாக வாழும் பெரும்பாலான கடவுள் நம்பிக்கையாளரைப் பெரியார் காட்டுமிராண்டிகள் என்றார். என்றும் பிற வகையிலும் கடவுள் பற்றிய பெரியாரின் பொருள் மொழிகளை விளக்கலாம்

ஆகவே இப்பொருள் மொழிகள் வசவுமொழிகளல்ல என்பதையும் நன்றாக ஆய்வு செய்து ஆய்வின் வெளிப்பாடாக அறிவிக்கப்பட்ட மொழிகள் என்பதையும் கருத்தில் கொள்வோமாக.

***நன்றி: பெரியாரியல் பாடங்கள் (தொகுதி:1)***
***பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந. இராமநாதன்***

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# தேர்தலில் பாஜகவின் தில்லுமுல்லு

## ஆதாரத்துடன் அம்பலப்படுத்துகிறார் ராகுல்

**ராகுல் காந்தியின் இந்தக் கட்டுரையை அனைத்து எதிர்க்கட்சிகளும் உன்னிப்பாகக் கவனித்து எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் - கடுமையான தேர்தல் பரப்புரை செய்ய வேண்டும் - என்பதற்கு இணையானது இதுபோன்ற சதிகளை அறிந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதும் ஆகும்.**

"மராட்டிய மாநிலத் தேர்தல் முடிவுகள் சந்தேகத்திற்கு உரியதாகவே இருக்கிறது. அதில் நடந்த மோசடியை மறைக்க எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீறி, அது தேர்தல் கமிஷனின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களில் இருந்தே அப்பட்டமாக தெரிகிறது. அதனை நான் உங்களுக்கு பட்டியலிட்டுச் சொல்கிறேன்" என்ற முன்னோட்டத்துடன் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் கட்டுரை எழுதியுள்ளார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி.



அனைத்து எதிர்க்கட்சிகளும் உன்னிப்பாகக் கவனித்து எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது இந்த கட்டுரை. மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் - கடுமையான தேர்தல் பரப்புரை செய்ய வேண்டும் - என்பதற்கு இணையானது இதுபோன்ற சதிகளை அறிந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதும் ஆகும்.

"முதலாவது, தேர்தல் கமிஷனரை நியமிக்கும் குழுவை ஒன்றிய அரசு மாற்றி அமைத்தது. அதற்காக 2023- ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி, குழுவில் இருந்த தலைமை நீதிபதி நீக்கப்பட்டார். தற்போது அதில் பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவர் இருக்கிறார்கள். அதில் பிரதமர், உள்துறை அமைச்சர் எடுக்கும் முடிவை மீறி எதிர்க்கட்சித் தலைவரால் என்ன செய்ய முடியும்?

இரண்டாவது. போலியான வாக்காளர்களைச் சேர்த்தது. கடந்த 2019-ஆம் ஆண்டு மராட்டிய சட்டசபைத் தேர்தலின் போது 8.96 கோடி வாக்காளர்கள் இருந்தனர். 2024-ஆம் ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தலின்போது இது 9.29 கோடியாக உயர்ந்தது. ஆனால் அதே ஆண்டு நவம்பர் மாத சட்டசபைத் தேர்தலில் இது 9.70 கோடிய அதிகரித்துவிட்டது. அதாவது 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு களுக்கு இடையே 5 ஆண்டுகளில் 31 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 2024-ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நவம்பர் மாதத்துக்குள் 5 மாதத்தில் 41 லட்சம் பேரை சேர்த்து இருக்கிறார்கள்.

மூன்றாவது, வாக்கு சதவீதம் அதிகமானது. தேர்தல் கமிஷன் தரவுகளின்படி, மராட்டிய தேர்தலில் மாலை 5 மணி வரை 58.22 சதவீதம் வாக்குகள் பதிவானது. ஆனால் இறுதி வாக்கு சதவீதம் 66.05 சதவீதம் என்று உள்ளது. அதாவது 5 மணிக்கு மேல் அதிகம் பேர் வாக்களித்து இருக்கிறார்கள்: இதனால் 7.83 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. அதாவது கடைசி நேரத்தில் 76 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்து இருக்கிறார்கள்.

நான்காவது போலி வாக்குகள். மராட்டியத்தில் 1 லட்சத்துக்கு அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ளன. ஆனால் அதில் 35 தொகுதிகளில் உள்ள 12 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் மட்டும் புதிய வாக்காளர்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சாவடிக்கும் சராசரியாக 600 வாக்காளர்கள் மாலை 5 மணிக்குப் பிறகு வந்திருக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு நிமிடம் என்று கணக்கிட்டால்கூட வாக்களிப்பு முடிய இரவு 10 மணி வரை ஆகியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. அப்படியானால் இந்த கூடுதல் வாக்குகள் எப்படி பதிவானது?.இந்த 35 தொகுதிகளிலும் பா.ஜ.க. கூட்டணியானது பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று இருக்கிறது.

உதாரணமாக 'காய்தி' சட்டசபைத் தொகுதியை எடுத்துக் கொள்ளலாம். கடந்த 2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இந்தத் தொகுதியில் காங்கிரஸ் 1.30 லட்சம் வாக்குகள் வாங்கியது. பா.ஜ.க. 1.19 லட்சம் வாக்குகள். அதே ஆண்டு நவம்பர் மாதம் நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அதே 1.36 லட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் இப்போது பா.ஜனதா 1.75 லட்சம் வாக்குகளைப் பெற்று இருக் கிறது. அதாவது 56 ஆயிரம் வாக்குகள் அதிகரித்து இருக்கிறது. இது எப்படி முடிந்தது?. இந்த இரண்டு தேர்தல்களுக்கு இடையில், காய்தியில் 35 ஆயிரம் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்காதவர்களும், இந்த 35 ஆயிரம் புதிய வாக்காளர்களும், ஏனோ துல்லியமாக பா.ஜ.க. பக்கம் கவரப்பட்டுள்ளனர். அவர்கள் இந்த கவர்ச்சிக்கு ஈர்க்கப்பட்ட விதத்தைப் பார்த்தால். அதில் ஒரு 'தாமரை வடிவம் கொண்ட தொலைநிலை காந்தம் இருந்திருக்க வேண்டும்' என்று நினைக்கிறேன்.

ஐந்தாவது ஆதாரங்களை அழிப்பது. 2024 நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டசபைத் தேர்தல்களுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை நாங்கள் கேட்டதற்கு, தேர்தல் கமிஷன் கொடுக்க மறுத்துவிட்டது. அதைவிட மோசமானது. சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஒரு மாதத்துக்குள். ஒரு வாக்குச்சாவடியில் நடந்த வாக்களிப் புக்கான சி.சி.டி.வி. மற்றும் வீடியோ காட்சிகளை வெளியிட உத்தரவிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகளை திருத்தம் செய்தது." என ஐந்து ஆதாரங்களை அடுக்கி இருக்கிறார் ராகுல் காந்தி. இது மராட்டியத்தில் மட்டுமல்ல; மேலும் பல மாநிலங்களில் நடந்தவைதான். இதனை மற்ற மாநிலங்களிலும் அமல்படுத்துவார்கள். 'மேட்ச் பிக்சிங்' போல இந்த மோசடிகளைச் செய்கிறது பா.ஜ.க.

தேர்தல் ஜனநாயகம் என்பதை சூதாட்டத் தேர்தலாக மாற்ற நினைக்கிறது பா.ஜ.க. அதனை மக்களாட்சி அமைப்புகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு தடுத்தாக வேண்டும். பா.ஜ.க. நடத்தும் மிக மோசமான ஆட்சியை விட மிக மோசமானது அது தேர்தல் நடைமுறைகளில் செய்யும் அநியாயங்கள் ஆகும். இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் தேர்தலின்போது இது 9.29 கோடியாக உயர்ந்தது. ஆனால் அதே ஆண்டு நவம்பர் மாத சட்டசபைத் தேர்தலில் இது 9.70 கோடிய அதிகரித்துவிட்டது. அதாவது 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு களுக்கு இடையே 5 ஆண்டுகளில் 31 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 2024- ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நவம்பர் மாதத்துக்குள் 5 மாதத்தில் 41 லட்சம் பேரை சேர்த்து இருக்கிறார்கள்.

# 'முன்' மாதிரிமங்கலம்!

## பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

ஆரிய ஆதிக்கத்தின் மீது, திராவிட இயக்கம் ஒரு நூற்றாண்டாக நிகழ்த்தி வரும் சம்மட்டி அடியால், முந்நூறு ஜாதிகள் சமூக தளத்தில் மூன்று பிரிவுகளாகச் சுருங்கிவிட்டன. உயர் ஜாதி, இடைநிலை ஜாதி, தாழ்த்தப்பட்ட ஜாதி என்ற 3 பிரிவுகள் மட்டுமே மெல்லியதான கோடுகளுடன் மிச்சமிருக்கின்றன. சுயமரியாதைத் திருமணங்கள், சமத்துவபுரங்கள், தீண்டாமையைக் கடைப்பிடிக்காத கிராமங்களுக்குப் பரிசு போன்ற திட்டங்களின் ஊடாக இந்த 3 கோடுகளையும் கரையச் செய்கிற பணியை 'திராவிட மாடல்' அரசு செய்துகொண்டிருக்கிறது. ஆனால், ஓர் அரசு மட்டுமே செய்துவிடக் கூடிய பணி அல்ல இது. சமூகமும் சேர்ந்து எடுக்க வேண்டிய தீர்க்கமான முடிவு அது. அந்த முடிவுக்கு ஆகச்சிறந்த முன் உதாரணம்தான் **மாதிரிமங்கலம்.**

மயிலாடுதுறைக்கு அருகே உள்ள அரங்கங்குடியைச் சேர்ந்த துரைசாமி, நீதிக்கட்சிக் கொள்கையின்பால் ஈர்க்கப் பட்டவர். பார்ப்பனிய அதிகார வர்க்கத்துடன் மோதல், தலித் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் என்று சிறுவயது முதலே ஜாதி ஒழிப்புக் களத்தில் உறுதியோடு நின்றவர். அவரைக் காவல்துறையில் சேர்த்துவிட்டால், இதையெல்லாம் விட்டுவிட்டு, மற்றவர்களைப் போல் சராசரியான மனிதனாகி விடுவார் என்று அவரது தந்தை நாராயணசாமி முயற்சி எடுத்து அவரைக் காவலராக்கினார். 1950-களில் காவல்துறையில் கோலோச்சிய பார்ப்பனர்களை எதிர்த்து, கலகக்குரல் எழுப்பி, பணியை விட்டார். அதன்பின்னர், கதிராமங்கலத்திற்குக் குடிபெயர, அங்கும் அக்ரஹார அடக்குமுறைகளுக்கு எதிராக வெகுண்டெழுந்தார். பின்னர், 1955-இல் மாதிரிமங்கலத்தில் மளிகைக் கடை வைத்தார். அத்துடன் மாதிரிமங்கலம் ஊராட்சியின் திராவிடர் கழகத் தலைவராகவும் ஆகிவிட்டார்.

அப்போது தேநீர்க் கடையில் தாழ்த்தப்பட்டோருக்கு அமர இடம் இருக்காது, தேங்காய்ச் சிரட்டையில் தேநீர் கொடுக்கும் வழக்கம் இருந்தது. துரைசாமி பேசிப்பார்த்தார், பலன் இல்லை. அருகே புதிய கடையைத் திறந்தார், பணியாளர்கள் யாரும் வரவில்லை. கேரளாவில் இருந்து அழைத்துவந்தார். 'இங்கு அனைவரும் சமமாக அமர்ந்து தேநீர் குடிக்கலாம்' என அறிவிப்பு செய்தார். முதன்முதலாக மக்கள் சமமாக அமர்ந்து தேநீர் குடித்தனர். மாதிரிமங்கலத்தில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோனேரிராஜ புரத்தில் ஆதிரத்தினேஸ்வரர் கோயில் எதிரே குளம் ஒன்று உள்ளது. அக்ரஹாரவாசிகளைத் தாண்டி வேறு யாரும் குளத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பது எழுதப்படாத விதி. அந்தத் தீண்டாமையை ஒழிக்க, ஊரெங்கும் பிரச்சாரம் செய்தார், பெரியாரை அழைத்துப் பொதுக் கூட்டம் நடத்தினார்.

ஆனால், காவல்துறைப் பாதுகாப்போடு மேலாதிக்கத்தைத் தக்கவைக்க முயன்றது எதிர்த்தரப்பு. இரவோடு இரவாக குளத்தில் பால்டாயில் ஊற்றினார் துரைசாமி. மீன்கள் செத்து மிதந்தன. குளத்தைத் தூர்வார பார்ப்பனர்கள் ஆட்களை அழைத்தனர். யாரும் குளத்தில் இறங்கக்கூடாது என ஏற்கெனவே எச்சரித்து வைத்திருந்தார் துரைசாமி. வெளியூரில் இருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டால், மீன்களுக்குப் பதிலாக மனிதர்கள் மிதப்பார்கள் என்றும் மிரட்டி வைத்திருந்தார். ஆட்சியர், பொதுமக்கள், திராவிடர் கழகத்தினர் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினர். குளத்தில் குளிக்கவும், தண்ணீர் எடுக்கவும் எல்லோரையும் அனுமதித்தால், தூர்வாரும் பணியில் ஈடுபவார்கள் என்று உறுதியாகச் சொன்னார். அப்போதும் பார்ப்பனர்கள் அமைதி காக்க, அனைவரும் குளத்தைப் பயன்படுத்தலாம், யாரேனும் தடுத்தால் சட்ட நடவடிக்கை பாயும் என்று எச்சரித்து, தீண்டாமைக் கொடுமையை முடிவுக்குக் கொண்டுவந்தார் ஆட்சியர்.

**-ர.பிரகாசு முரசொலியில் எழுதியது.**

*(முதல் பக்க தொடர்ச்சி...)*

**கோவை:** 7/6/2025 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் வழக்கறிஞர் மதிவாணன் அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் கலைஞர் அவர்களுக்கு புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. தோழர் வெங்கட்கலைஞரின் சுயமரியாதைப் பணிகளை நினைவுகூர்ந்து பேசினார். கடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்தியது பற்றியும் அதன் நிறைகுறைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

அடுத்தகட்ட பணிகள் பற்றி எடுக்கப்பட்ட முடிவுகள்:

- கோவை மாவட்டக் கழகம் கிராமங்களுக்கு சென்று தயாரித்த ஜாதி தீண்டாமை பட்டியல் அடிப்படையில் அடுத்தக் கட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.
- புதிய தோழர்களுக்கு பெரியாரியல் பயிலரங்கம் நடத்துவது
- கலைஞர் பிறந்தநாளை ஒட்டி தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது
- காமராஜர் பிறந்தநாளை கொண்டாடுவது
- 'வேண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி' தெருமுனைக் கூட்டங்களை மாதா மாதம் இடைவிடாமல் நடத்துவது. அதன் முதல் கட்டமாக இருகூர், AGபுதூர், இராவத்தூர் பகுதிகளில் நடத்துவது
- சிவானந்தா காலனியில் டிசம்பரில் பொதுக்கூட்டம் நடத்துவது
- முகநூல், இன்ஸ்டா, எக்ஸ் தளப் பொறுப்பாளராக மாணவர் கழகப் பொறுப்பாளர் நவீன் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் தோழர் ஹரிஹரன் மாவட்ட பொறுப்பாளர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். 'பெண் ஏன் அடிமையானால்' ஆங்கில பதிப்பு நூலைக் கொடுத்து மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் வரவேற்றார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : June 13, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran